**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 7 /2020**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.02.2024 | தந்தை/கணவர் பெயர்: | வீராசாமி |
| பெயர்: | அய்யாறு (PW-1 Chief ) | வயது : | 90/2024 |
| கிராமம்: | திருமங்கலம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 06.02.2024.**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

தாவா சொத்தைப் பொறுத்து எனது சகோதரரான முனியன் பெயரில் ஏற்பட்ட குத்தகை உரிமை பதிவேட்டின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்தில் 1 ஏக்கர் 56 செண்ட் நிலத்தை நான் சாகுபடி செய்து வருவதாக கோவிலார் எனக்கு வழங்கிய சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்திற்கு முனியன் பெயரில் கோவிலாருக்கு நான் செலுத்திய குத்தகை ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் மீது

எனது அண்ணன் மகன் மகாராஜன் தாக்கல் செய்த வழக்கில் வழக்குரையின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.